**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 75 of 2022

Depositions of PW -5 witness for ________ Prosecution / Defence / Court

Name : இளங்கோவன்

Father's Name : சுப்பையன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of August** 2025.

**(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் பள்ளபாளையம், பாரதிபுரத்தில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். பார்வை மகசர் எண் ஒன்றில் உள்ள ஒன்றாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசர் இரண்டில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 07.01.2020 ம் தேதி மதியம் சுமார் 14.30 மணிக்கு நான் நடுப்பாளையம் பிரிவில் இருந்த பொழுது என் முன்னிலையிலும் விவேகானந்தன் அவர்கள் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். பின்னர் அதே தினத்தன்று மதியம் 03.00 மணியளவில் பள்ளபாளையம் பஞ்சாயத்து ஆபீஸ் முன்பு உள்ள இரண்டாவது சம்பவ இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் விவேகானந்தர் இருவரும் சாட்சி

கையொப்பம் செய்தோம். பார்வைமகசர் 1 **அ.சா.ஆ.2** மற்றும் பார்வைமகசர் 2 **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வீட்டிற்கும் பார்வை மகசர் தயார் செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கிலோ மீட்டர் இருக்கும்.போலீசார் நான் A1 ரெஸ்டாரன்ட் சென்ற பொழுது இருந்தார்கள், அங்கு விசாரித்தார்கள். போலீசார் தயார் செய்த வரைபடத்தில் நான் கையொப்பம் செய்தேனோ என்றால் வரைபடத்தில் தான் கையொப்பம் செய்தேன். எப்பொழுது வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் எப்பொழுது தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. தட்டத்து செய்த பேப்பரில் தான் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் வந்த விவேகானந்தனும் தட்டச்சு செய்த ஒரு பேப்பரிலும் மற்றொரு பேப்பரில் கையொப்பம் செய்தோம். மற்றொரு பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் சம்பவ இடத்தை குறிப்பிட்டு எழுதி இருந்தார்கள். அதில் நானும் விவேகானந்தனும் கையொப்பம் செய்தோம்.

2. மாதிரி வரைபடத்தில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை பார்வைமகசரில் கையொப்பம் செய்தேன்.நான் வரைபடத்தில் கையொப்பம் செய்தேன் என்றும் பின்னர் பார்வை மகசரில் கையொப்பம் செய்தேன் என்றும் வழக்கிற்காக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. யார் அழைத்தும் நான் A1 ரெஸ்டாரன்ட் செல்லவில்லை, உணவு அருந்துவதற்காக சென்றேன். போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.08.18 18:32:10 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**